卐 ஓம் ஜெய் குருவே துணை 卐

# பிரும்மரிஷி மலை மகிமை

## சித்தர் நாமவளி

16 AUG 2011



பிரும்மரிஷி மலை

அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

# ஜோதி தரிசனம் பாப விமோசனம்



இலங்கை தொடர்பு: + 94757846102


**மகா சித்தர்கள் திருக்கோவில்**

பிரம்மரிஷி மலை, எளம்பலூர்,

பெரம்பலூர் 621212,

இந்தியா.

Phone : + 91 4328 290 250, + 91 900 319 8088

Email: divine.charity@yahoo.co.in brammarishihills@gmail.com

Web: www.gatewaytopeace.org

brammarishihills.wordpress.com

தபால் முகவரி:

**மகா சித்தர்கள் டிரஸ்ட்**

த. பெட்டி எண் 13, பெரம்பலூர் – 621212, இந்தியா

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

ஓம் ஜெய் குருவே துணை

# மகா சித்தர்கள் வருகை

இந்த உலகத்தில் பிறப்பை எடுக்க வைத்த இறைவனைப் பற்றியும் அந்த இறைவன் யார் என்று அறிந்து கொள்ளும் திறமை பற்றிய அறிவை நமக்கு தந்தவர்களே சித்தர்கள். ஆகவே இவ்வுலகில் அவதரித்த அனைத்து மகான்களும் சித்தர்களே! மதங்கள் வணங்கும் அனைத்து தேவதைகளும் சித்தர்களால் உருவாக்கப்பட்ட தத்துவங்களே. ஒவ்வொரு யுகத்துக்கும் ஏற்ப ஒவ்வொரு கால கட்டத்திலும் சித்தர்கள் மனித ரூபத்தில் அவதரித்து மக்களை வழி நடத்தி வருகின்றனர்.

சித்தர்கள் எங்கு வாழ்ந்தார்கள், அவர்கள் கூறிய தத்துவம் தான் என்ன என்று பலர், சித்தர்கள் எழுதிய நுல்களை அடிப்படையாக வைத்து ஆராய்ந்து, அவர்களது மனித அறிவிற்கு ஏற்ப எழுதி வருகின்றனர். ஆனால் அவ்வாறு மனித அறிவை அடிப்படையாக வைத்து ஆராய்வதை விட, நேரடியாக சித்தர்களின் அருளைப் பெற்று அவர்களது எண்ணங்களை, செய்திகளை நாம் அறிய முடியும், இவ்வாறு சித்தர்களின் அருளைப் பெற்றவர்கள் சிலர் இவ்வுலகில் விளம்பரம் எதுவுமின்றி மறைமுகமாக வாழ்ந்து வருகின்றனர்.

அவ்வாறு சித்தர்களின் நேரடித் தொடர்பைப் பெற்று மாபெரும் சித்தராக வாழ்ந்து வருபவர்தான் பிரும்மரிஷி காகபுஜண்டரின் சீடராகிய அன்னை சித்தர் ராஜ் குமார் சுவாமிகள். இவர் புலிப்பாணி முனிவராக இவ்வுலகில் அவதாரம் செய்தவர். இவர் தமது 24 வயதிலேயே. அவரது குரு ஸ்ரீலஸ்ரீ காக புஜண்டரிடம் ஆன்மீகப் பயிற்சி பெற்று அட்டமா சித்துக்களை அடைந்ததுடன், ஆயகலைகள் 64 ஐயும் அதற்கு மேலான கலையையும் கற்றவராவர்.

தென்னிந்தியாவில் சித்தர்கள் வாழும், வாழ்ந்த மலைகள், குகைகள், என்பவை பற்றி ராஜ்குமார் சுவாமிகளுக்கு தெரிந்தவை, வேறு எவருக்கும் தெரிந்து இருக்க வாய்ப்பில்லை.

மனிதருள் மறைந்து கிடக்கும் மாபெரும் குண்டலினி தெய்வ சக்தியை விழிப்படைய பெற்றவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். ராஜ்குமார் சுவாமிகளின் குரு காகபுஜண்டர், சுவாமிகளின் 24 வயதிலேயே அவரது குண்டலினி சக்தியை விழிப்படைய செய்தார்.

ராஜ்குமார் சுவாமிகளின் குருநாதராகிய காகபுஜண்டர் கலியுகத்தில் நடைபெறவிருக்கும் இயற்கை மாற்றங்களை அவரது "கால ஞானத்தில்" (32 ஆம் பக்கம்) கூறியுள்ளார். மேலும் இவ்வாறு நடக்கவிருக்கும் இயற்கைப் பேரழிவுகளில் இருந்து தரும சிந்தனை உள்ள ஒரு கோடி மக்களை பாதுகாக்கும் வழி முறைகளையும் கால ஞானத்தில் காகபுஜண்டர் கூறியுள்ளார். கலியுகத்தில் நடைபெறும் அதர்மங்கள் அனைத்தும் ஒழிந்து, தர்ம சிந்தனையுடைய மக்களை கொண்ட சமுதாயம் உருவாகும். இந்த கால கட்டத்தில் சித்தர்கள் அனைவரும் அவதரித்து இவ்வுலகில் தர்மத்தை நிலை நாட்டுவார்கள்.

கலியுகத்தில் அவதரித்த அன்னை சித்தர் ராஜ்குமார் சுவாமிகள் சித்தர்கள் எங்கு இருக்கிறார்கள், ஆண்டவனை அடைய அவர்கள் எவ்வாறு வழிகாட்டுகிறார்கள், என்பதை எல்லோரும் இலகுவாக விளங்கிக் கொள்ளும் வகையில் எடுத்தியம்புகிறார்கள்.

**சித்தர்கள் கூறும் செய்திதான் என்ன?**

சித்தர்கள் கூறும் செய்தி என்னவென்றால், தர்மம் குன்றிய இக்கால கட்டத்தில் மக்கள் தங்களுக்கு முடிந்தவரையில் தான தருமங்கள் செய்ய வேண்டும். விசேடமாக அடுத்த வேளை உணவு இன்றி இருப்பவர்க்கு அன்னம் வழங்க வேண்டும். தவத்தில் காலத்தை ஓட்டாமல் தருமத்தில் சிந்தனை வைக்க வேண்டும். தருமம் ஒன்றுதான் தழைக்கும். யார் ஒருவர் தருமத்தை கடமையாக நினைத்து செய்கிறாரோ, அந்த தருமமே அவரைக் காப்பாற்றும் என்பது கீதையின் தத்துவமாகும்.

"யானை, குதிரை ஆயிரம் கொடுத்தாலும் கோடி பசுக்களை கொடுத்தாலும் தங்கம், வெள்ளி எவ்வளவு கொடுத்தாலும், உபயகுல

விசுத்தம் நம் குடும்பத்தையே அடிமையாக கொடுத்தாலும், கோடி கன்னிகைகளுக்கு விவாஹம் செய்து கொடுத்தாலும் அன்னதானத்திற்கு ஈடாக வேறு தானம் கிடையாது, இது சித்தர்கள் வாக்கு"

அடுத்தவேளை உணவு இன்றி இருப்பவருக்கு நாம் அன்னம் வழங்கும் போது, அன்னத்தைப் பெற்றவர்க்கு தானம் வழங்கிய நாம் ஆண்டவனைப் போல் காட்சி அளிக்கிறோம். அன்னதானத்தைப் பெற்றவர்கள் நம்மை மனதார வாழ்த்துவார்கள். எமது மனது இலகி மனதில் கருணை ஊற்றெடுக்கிறது. அந்த கருணை, அன்பு எனும் சிவமாகிறது. அந்தக்கணத்தில் நம்மில் உறைந்து கிடக்கும் இறை சக்தி விழிப்படைந்து நமது ஆத்மாவை பலமாக்குகிறது. இவ்வாறு பலருக்கு அன்னமளித்த நாம் அதிக ஆத்ம பலம் பெற்று வாழும் போது, நாம் நினைத்த காரியம் கை கூடுகிறது. எங்கிருந்தோ நமக்கு உதவிகள் கிடைக்கிறது.

இப்படிப்பட்ட சக்தி நாம் பல்லாண்டுகளாக தவம் அல்லது தியானம் செய்து, பல கோடிமுறை மந்திரங்கள் ஜெபித்தாலும் இலகுவாகக் கிடைக்காது.

ஆக கலியுகத்திற்கு ஏற்ப, படித்தவர்களோ, படிக்காதவர்களோ, செல்வந்தர்களோ, செல்வம் இல்லாதவர்களோ – எல்லோரும் கடைப்பிடிக்கக் கூடிய, இலகுவாக ஆண்டவனை அடையக் கூடிய முறைகளை சித்தர்கள் எமக்குக் காட்டுகிறார்கள்.

தெய்வ அருள் பெற்ற மானிடர்களே! சித்தர்கள் எந்த உருவிலும் நடமாடுவார்கள். அவர்கள் பிச்சைக்காரர்கள் உருவிலும், இன்னும் பைத்தியக்காரர்கள் உருவிலும் கூட நடமாடலாம். எவரையும் அலட்சியம் செய்யாதீர்கள். உங்களால் முடிந்தவரையில் தான தருமங்கள் செய்யுங்கள். எந்தவொரு சித்தராவது உங்களிடம் யாசகம் பெற்றுவிட்டால் இப்பிறவிப்பயனை நீங்கள் அடைந்து விடுவீர்கள்

# ஸ்ரீ பாம்பாட்டி சித்தர் கூறிய சித்தர்கள் வல்லமை

எட்டு நாகத்தை கையால் எடுத்து ஆட்டவும், இந்திரனார் உலகத்தை நாம் கேட்ட இடத்தில் காட்டவும், கட்டுக்கடங்காத பாம்பைக் கட்டி விடவும் வல்லவர்கள். மேலும் ஆதிசேடன் ஆனாலும் அவர்கள் கையில் ஆட்டும் வல்லமை உள்ளவர்கள். நீதியோடு அவற்றையும் அடக்கி ஆடச் செய்ய வல்லவர்கள். தூணைச் சிறு துரும்பாகவும், துரும்பைப் பெருதூணாகவும் தோன்றச் செய்வர். மூன்று உலகங்களையும் பொன்னாகச் செய்வதும், செங்கதிரைத் தன் கதிராய் செய்துவிடுவதும், இப்பெரிய உலகத்தை இல்லாமற செய்வதும், வேந்தன் செய்த சிருஷ்டிகள் போல் வேறு செய்ய வல்லவர்கள். அந்த வேந்தனையும் தன் கீழே மேவச் செய்வதும், நாதனுடன் சமமாகச் சித்தர்கள் வாழ்வார்கள்.

64 கலைகளையும் கற்றவர்கள், அதற்கு மேல் ஒரு கலையானதை அறிந்தவர்கள். ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் ஆக்க வல்லவர்கள், எட்டு மலையையும் பந்தாய் எடுத்து எறிய வல்லவர்கள். ஏழு கடலையும், குடித்து ஏப்பமிடுவதும், மண்டலம் முற்றும் கையால் மறைத்து விடுவதும், தொண்டருக்குச் சூனியம் சொல்லிக் காட்டவும் வல்லவர்கள். மூண்டெறியும் அக்கினிக்குள் முக்கிவிடுவதும் மறுபற்றுச் சற்றும் இல்லா மனம் உடையவர்கள். சீறும் புலி, யானை, யாழி, முதலியவற்றைச் சிற்றடிக்குக் குற்றேவல் செய்யச் சொல்வதும், வீறுபெருங்கடவுளை அவர்களுடனே விளையாட செய்யவும் வல்லவர்கள் என்று பாம்பாட்டி சித்தர் சித்தர்களுடைய வல்லமையை கூறுகிறார்கள்.

**குருவே மேலானவர்:** எப்போதும் குருவானவர் சமாதியான திருக்கோயிலில் வியாழன், பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி, போன்ற முக்கிய விசேஷமான நாட்களில் குருவின் திருமேனிக்கு அபிஷேக ஆராதனை செய்தும் உள்ளம் உருகி பஜனையும்

நூலகம் யாழ்ப்பாணம்

பாடுவதால், மனிதனின் மனச்சுமை குறையும். தேகபலமும் பெருகும். மனித வாழ்வின் மேன்மைக்கும், குடும்ப ஒற்றுமைக்கும், குழந்தைகளின் ஞான அறிவு வளரவும் மிக மிக உகந்தது குரு வழிபாடுதான்.

தெய்வங்களை வணங்கினால் ஏற்படும் பலன் சில நாட்கள் கழித்து நமக்கு நிச்சயம் நன்மை தரும். ஆனால் குருவை வணங்கினால் நமக்கு எந்த தெய்வத்தின் சக்தி தேவையோ! அந்த தெய்வத்தையே நமக்கு உடனே அருள் செய்யும் வல்லமை ஞான அறிவு தரும் குருவுக்கு மட்டுமே உண்டு! குரு இல்லையே என்று உருவத்தை கண்டு ஏமாறக் கூடாது. அரு உருவான குரு உன்னிலேயே இருப்பதும் யார் மூலமாகவும் உணர்த்தவும், அதனை நீங்கள் உணரவும் வைப்பவர்தான் காரண காரிய குருவாய் உங்களுக்குள் எப்போதும் அணையா ஜோதியாய் இருக்கும் பகவான் ஸ்ரீலஸ்ரீகாகபுஜண்டர் மகரிஷி ஆவர்ர்.

**குரு பக்தி** : நான்கு வேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவராயினும் உடலெல்லாம் திருநீறு பூசி ஜபம் செய்பவராயினும், புண்ணியத் தீர்த்தங்களாடி, நோன்புகள் நூற்பவராயினும், எவர்களுக்குக் குருபக்தி இல்லையோ அவர்களுக்கு முக்தி இல்லை. – புரந்தரதாசர்–

**குரு மகிமை :** தெய்வ அபராதம் செய்த ஒருவன் குருவைத் தஞ்சமடைந்தால் அவர் அவனைக் காப்பாற்றி விடுவார். ஆனால் குருவிற்கு ஒருவன் அபராதம் செய்தால் பரமேஸ்வரனால் கூட அவனை காப்பாற்ற முடியாது.

**குரு தத்துவம் :** சற்குருவின் அருள் இல்லாமல் பிறவிக் கடலைத் தாண்ட இயலாது. இறைவன் நாமம் என்ற அமிர்தத்தை எவர் பருகச் செய்வாரோ அவரே உண்மையான குரு. பரமாத்மாவை காட்டி கண்களின் கலி தீரச் செய்பவரும், தன்னைக் கண்டால் பரமாத்மாவை போல் தோன்றுபவருமே சற்குரு. ஆண்டவனைப் பற்றாதே. ஏனெனில்

ஆண்டவன் நிதியும் நிலமும் தான் தருவார். ஆண்டவனின் அடியாரான குருவைப் பற்றிக்கொள் ஏனென்றால் அவர் ஆண்டவனையே உனக்குத் தருவார். இப்படி குருவின் மகிமையை பல சித்து புருஷர்கள் கூறுகிறார்கள்.

இலங்கை மக்கள் நலன் காண நிச்சயம் ஒருமுறை தரும சிந்தனையுடன் ஒரு நிலை மனதுடன் சற்குரு ஸ்ரீகாகபுஜண்டர் மகரிஷியின் சமாதி திருக்கோயிலுக்கு சென்று மன அமைதியும், சக்தியின் அருட்கடாக்ஷமும் மகா சித்தர்களின் குருகடாக்ஷமும் பெற்று! தேவலோகத்து இந்திரனைப் போல் வாழ்வாங்கு வாழ அன்னைச் சித்தர் வாழ்த்துகிறார்.

# பிரும்மரிஷி மலை மகிமை

சித்தர்கள் மனித நடமாட்டத்திற்கு அப்பாற்பட்ட வனங்களிலும், மலைகளிலும், குகைகளிலும் வாழ்ந்தனர், வாழ்கின்றனர். அவர்களை நெருங்கி தொடர்பு கொள்வது மனிதர்களால் சுலபமாக செய்ய முடியாததாகும். ஆனால் தெய்வீக மலையாம் பிரும்மரிஷி மலையில் 210 சித்தர்களும் சூட்சுமமாக வீற்றிருப்பதால், இம்மலைக்கு வரும் பக்தர்களுக்கு அவரவர் ஆன்ம சக்திக்கும், பூர்வ புண்ணியத்திற்கும் ஏற்ப சித்தர்கள் அருள் பாலிக்கிறார்கள்.

ஒரு கோடி மக்களை நெருப்பின் அழிவிலிருந்து பாதுகாத்து வைக்கும் பூலோக இந்திரன் என்று தேவர்களாலும், ரிஷிகளாலும் இன்று வரை போற்றப்படும் பகவான் ஸ்ரீலஸ்ரீ காகபுஜண்டரும், ஸ்ரீசட்டமுனி, ஸ்ரீ அகஸ்தியர், ஸ்ரீ போகர், ஸ்ரீ காலாங்கி, ஸ்ரீ புலிப்பாணி, ஸ்ரீ கொங்கணரும் வாசம் செய்யும் மாயா ஜால மலை இந்த பிரும்மரிஷி மலை ஆகும்.

வருங்காலத்தில் ஸ்ரீ தேவி நளினி அம்மனாய் (கேரளத்து சேலை கட்டி) கையில் திரிசூலத்துடன் தோன்றி" ஸ்ரீ ரங்கா கலி

கொண்டுவா'' என்று கூறி கலி முடிக்கும் போது பகவான் ஸ்ரீலஸ்ரீ காகபுஜண்டர் மகரிஷி மனிதரில் மனிதர் ஒரு கோடி மனித ஜீவ வித்துக்களை பாதுகாக்கும் மாமலை பிரும்மரிஷி மலையாகும். திரௌபதி ஈஸ்வரி அம்மன் பிறந்த இம்மலையின் அடிவாரத்தில் ஸ்ரீலஸ்ரீ காக புஜண்டர் தலையாட்டி சித்தர் ஜீவ சமாதி ஆகியுள்ளார். திருச்சிக்குப் பக்கத்தில் பெரும் புலியூர் என்ற பெரம்பலூர் அருகிலுள்ள எளம்பலூர் கிராமத்தில் பிரும்மரிஷி மலை உள்ளது.

அன்னைச் சித்தர் ராஜ்குமார் சுவாமிகளின் பெருமுயற்சியால் செல்வ மகா வெற்றி கணபதி திருக்கோயில், பகவான் ஸ்ரீலஸ்ரீ காகபுஜண்டேஸ்வரர் திருக்கோயில், அருட்பெருஞ்சோதி யாண்டவர் திருக்கோயில், ஸ்ரீ காகன்னை ஈஸ்வரர் சமேத நளினியாம்பிகை, காவல் கருப்பண்ண சுவாமி, நாக தேவதை சன்னிதிகள் இம்மலையின் அடிவாரத்தை சிறப்பிக்க உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் இக்கோயில் பல்லாயிரம் ஆண்டுகள் நிலைத்து நிற்க கருங்கற்களால் புதிதாகக் கட்டப்பட்டு வருகிறது.

உலகத்திலேயே மகா சக்தி வாய்ந்த காவல் கருப்பண்ண சுவாமி இம்மலையின் அடிவாரத்தில் இன்னும் நடமாடி பேசும் தெய்வீக முனிவர் போல் உள்ளார். எந்தக் காரியத்தையும் நினைத்து நம்பிக்கையுடன் தூப, தீப அபிஷேகம் ஆராதனை செய்து மூன்று தேங்காய்களை முட்டுக் கொடுத்தல் முடக்கமான எந்த காரியத்தையும் செய்து முடிப்பார் பிரும்மரிஷிகாவல் கருபபண்ண சுவாமி.

# சித்தர்கள் வழிபாடு

ஆரம்பத்தில் பதினெட்டு பேராக இருந்த சித்தர்கள் பல முறை மீண்டும் இப்பூவுலகில் அவதரித்து, இன்று 210 சித்தர்களாக விளங்கு கின்றனர். சித்தர்கள் இயற்கையை போற்றி வணங்குவ தோடு, அவர்கள் எல்லா உயிரினங்களையும் மிகவும் நேசிப்பவர்கள். அதனால் எவ்வுயிரையும் வதைப்பதோ அதை உணவாக உண்ணுவதோ சித்தர் வழிபாட்டிற்கு ஒவ்வாதது.

தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கியிருக்கும் இக்காலகட்டத்தில் சித்தர்களை வழிபடுபவர்கள் உண்மையும், அன்பும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் சித்தர்கள் தங்களுடைய அருளை வழங்க எங்கே எங்கே என்று மானிடர்களை தேடும் காலமிது. சித்தர்கள் சூட்சுமத்தில் ஜோதி ரூபமாகக் காட்சியளிப்பதால் “ஜோதிவழிபாடு” போற்றத்தக்க ஒன்றாகும்.

அதிகாலையில் பிரும்ம முகூர்த்தத்தில் சித்தர்களது அதிர்வு மிக அதிகமாகும். இவ்வேளையில் கிழக்குத் திசையில் நல்லெண்ணெய் வசதியிருந்தால் நெய் தீபம் ஏற்றி “ஓம் ஜெய் குருவே துணை” என ஆரம்பித்து, கணபதிக்குரிய மந்திரத்தை சொல்லிவிட்டு 210 சித்தர்கள் துதியோடு 108 லட்சுமி துதியும் சொல்லுங்கள்.

தீபம் ஏற்றி கூட்டு வழிபாடு செய்யும் போது, ஒருவர் சித்தர்களின் நாமங்களை உச்சரிக்க மற்றவர்கள், அரோகரா அல்லது போற்றி, போற்றி என்று சொல்லுங்கள். மேலும் யாகம் செய்யும் போது ஒருவர் சித்தர்களின் நாமங்களை சொல்ல மற்றவர்கள் “சுவாஹா என்று சொல்லுங்கள்.”

## சித்தர்களின் கணபதி பூஜை

உள்ளம் சுத்தி செய்து நெய்தீபம் ஏற்றி மஞ்சள் பிள்ளையார் பிடித்து, கணபதி மூல மந்திரம் சொல்லி கணபதியை அருகம்புல், எருக்கம் பூ, மல்லிகைப் பூ மற்றும் வாசனைப் பூக்களால் அர்ச்சித்து பூஜை செய்ய வேண்டும்.

**கணபதி மூல மந்திரம்–**

ஓம் ரீங் அங் உங் கணபதியே நமஹ.

பிரதமை முதல் பதினைந்து திதிகளுக்குரிய கணபதியின் திருநாமங்கள்.

| | | |
|---|---|---|
| ஓம் | பால கணபதியே | நமஹ |
| ஓம் | தருண கணபதியே | நமஹ |
| ஓம் | பக்த கணபதியே | நமஹ |
| ஓம் | வீர கணபதியே | நமஹ |
| ஓம் | சக்தி கணபதியே | நமஹ |
| ஓம் | துவிஜ கணபதியே | நமஹ |
| ஓம் | சித்தி கணபதியே | நமஹ |
| ஓம் | உச்சிஷ்ட கணபதியே | நமஹ |
| ஓம் | விக்ன கணபதியே | நமஹ |
| ஓம் | க்ஷிப்ர கணபதியே | நமஹ |
| ஓம் | ஹேராம்ப கணபதியே | நமஹ |
| ஓம் | லட்சுமி கணபதியே | நமஹ |
| ஓம் | மகா கணபதியே | நமஹ |
| ஓம் | விஜய கணபதியே | நமஹ |
| ஓம் | நிருத்த கணபதியே | நமஹ |
| ஓம் | ஊர்த்துவ கணபதியே | நமஹ |
| ஓம் | பிரும்மரிஷிமலை செல்வ மகா கணபதியே | நமஹ |

கணபதி துதியோடு 210 சித்தர்களின் துதியும், 108 லட்சுமி துதியும், பூஜையும் செய்தால் எவ்வளவு பெரிய கொடுமையான நோய்கள், குடும்ப பிரச்சினைகள், திருமண தடை, மாந்தீரிக தொந்தரவுகள், கிரகக் கோளாறுகள் அனைத்தும் நீங்கி செய்யும் தொழிலில் பலகோடிக்கு அதிபதியாய் தரும சிந்தனையோடு புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மைகள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, நோயின்மை, அழகு, வாழ்நாள், பொறுமை, இளமை, துணிவு போன்ற பதினாறு பேறுகளும் குருவருளும், திருவருளும் பெற்று வளமுடன் வாழ்வாங்கு வாழ்வார்கள் என்பது அன்னை சித்தரின் அருள் வாக்காகும்.

# சித்தர் நாமவளி வரலாறு

அன்னை சித்தர் ராஜகுமார் சுவாமிகள் தமது இளம் வயதில் தமக்குள் உள்ள மந்திரத்தை தேடி காடு மலைகள் எல்லாம் அலைந்த போது, இந்தியாவில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நம்பி மலையில் அங்கு சூட்சுமமாக எழுந்தருளியிருக்கும் பூத நாராயண சித்தர் பெருமான் அசரீரியாக எல்லா சித்தர்களின் பெயர்களையும் மந்திரமாகக் கூறும்படி பணித்தார். மேலும் அவ்வாறு சொல்லும் போது எல்லா மந்திரங்களையும் சொன்ன பலன் கிடைக்கும் என்றார்.

## 210 சித்தர்கள் நாமவளி துதி

ஓம் மகா கணபதிக்கு அரோகரா
ஓம் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு
ஓம் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுக்கு
ஓம் சப்தரிஷிகளுக்கு
ஓம் அஷ்டதிக்குப் பாலகர்களுக்கு
ஓம் சிவபெருமானுக்கு
ஓம் விஷ்ணு பெருமானுக்கு
ஓம் பிரும்ம தேவனுக்கு
ஓம் பராசக்திக்கு
ஓம் அஷ்டலக்ஷ்மிகளுக்கு
ஓம் கலைவாணிக்கு
ஓம் முருகப் பெருமானுக்கு
ஓம் கால பைரவருக்கு
ஓம் வீரபத்திர சாமிக்கு
ஓம் தேவேந்திரனுக்கு
ஓம் இருபத்தி ஏழு நட்சத்திரங்களுக்கு
ஓம்.பதினைந்து திதிகளுக்கு
ஓம் ராகுகால தேவதைக்கு
ஓம் எமகண்ட தேவதைக்கு

ஓம் நவக்கிரக நாயகர்களுக்கு அரோகரா
ஓம் பஞ்ச பூதங்களுக்கு
ஓம் பூமாதேவிக்கு
ஓம் எம தர்மராஜனுக்கு
ஓம் சித்ராகுப்தருக்கு
ஓம் பூரிமலை அமுதமாமகரிஷிக்கு
ஓம் பூரிமலை சூதமா முனிவருக்கு
ஓம் பூரிமலை சிவதியான முனிவருக்கு
ஓம் பூரிமலை பூபால முனிவருக்கு
ஓம் பூரிமலை முத்து வீரமா முனிவருக்கு
ஓம் பூரிமலை ஜெயமுனிவருக்கு
ஓம் பூரிமலை வேத முனிவருக்கு
ஓம் பத்மநாபன் காவு சங்க முனிவருக்கு
ஓம் மலையாளம் காசிப முனிவருக்கு
ஓம் மலையாளம் பதஞ்சலி முனிவருக்கு
ஓம் மலையாளம் வியாக்ர முனிவருக்கு
ஓம் மலையாளம் ஜனகமா முனிவருக்கு
ஓம் ஆரியன் காவு சிவபிரும்ம மகரிஷிக்கு
ஓம் ஆரியன் காவு பராச ரிஷிக்கு
ஓம் ஆரியன் காவு வல்ல சித்தருக்கு
ஓம் ஆரியன் காவு அசுவினி தேவருக்கு
ஓம் நம்பிக் கோயில் குதம்பை சித்தருக்கு
ஓம் நம்பிக் கோயில் யோகச் சித்தருக்கு
ஓம் நம்பிக் கோயில் புண்ணாக்கு சித்தருக்கு
ஓம் விஸ்வநாதன் காவுகஞ்சமலைச் சித்தருக்கு
ஓம் ஒற்றையூர் திருமூல நாதருக்கு
ஓம் பச்சையாறு வைரவனுக்கு
ஓம் பச்சையாறு வன தேவதைகளுக்கு
ஓம் பச்சையாறு மௌன சித்தருக்கு
ஓம் பச்சையாறு தேகசித்தி சித்தருக்கு
ஓம் கமலநாதன் காவு வரரிஷிக்கு

ஓம் கமலநாதன் காவு கவுபால சித்தருக்கு அரோகரா
ஓம கமலநாதன் காவு மதிராஜ ரிஷிக்கு
ஓம் கமலநாதன் காவுகௌதம ரிஷிக்கு
ஓம கமலநாதன் காவு தேரைய முனிவருக்கு
ஓம் கமலநாதன் காவு விசுவினி தேவருக்கு
ஓம் கமலநாதன் காவு அம்பிகாநந்தருக்கு
ஓம் பொன்னறியான் காவுடமரானந்தருக்கு
ஓம் மாமாங்குருச்சி கையாட்டி சித்தருக்கு
ஓம் கூடவநல்லூர் மலை கண்ணா நந்தருக்கு
ஓம் கூடவநல்லூர் மலை சித்தானந்தருக்கு
ஓம் இங்கிலாசப் பருவதம் சச்சிதானந்தருக்கு
ஓம் கந்தநாதன் காவு கனநாதருக்கு
ஓம் வள்ளியூர்மலை சூரியானந்தருக்கு
ஓம் வள்ளியூர்மலை சிவானந்தருக்கு
ஓம் வள்ளியூர்மலை தட்சணாமூர்த்திக்கு
ஓம் வள்ளியூர்மலை சொரூபாநந்தருக்கு
ஓம் களக்காடுமலை ஏகநாதருக்கு
ஓம் களக்காடு மலை மதிசீல மஹா முனிவருக்கு
ஓம் தீர்த்தமலை அகஸ்தியர் முனிவருக்கு
ஓம் வராகிமலை கம்பளி நாதருக்கு
ஓம் வராகிமலை புலஸ்தியருக்கு
ஓம் பாபநாசமலை திரிகாலக்கியான முனிவருக்கு
ஓம் அருவிமலை அருட்சித்தருக்கு
ஓம் அருவிமலை கெவுன குளிகைச் சித்தருக்கு
ஓம் செங்கோட்டை மலை ராஜரிஷிக்கு
ஓம் செங்கோட்டை மலை வசந்த மாமுனிவருக்கு
ஓம் செங்கோட்டை மலை போத முனிவருக்கு
ஓம் சுரண்டை மதிமான் மலை காங்கேயரிஷிக்கு
ஓம் சுரண்டை மதிமான் மலை காஞ்சன முனிவருக்கு
ஓம் சுரண்டை மதிமான் மலை ஞானசமாதி சித்தருக்கு
ஓம் சுரண்டை மதிமான் மலை சாந்த மஹாரிஷிக்கு

ஓம் சுரண்டை மதிமான் மலை வாசியோக சித்தருக்கு அரோகரா
ஓம் கண்ணாற்று மலை காலாட்டி சித்தருக்கு
ஓம் கண்ணாற்று மலை வாதசாந்த மஹாரிஷிக்கு
ஓம் கண்ணாற்று மலை சத்த ரிஷிக்கு
ஓம் கண்ணாற்று மலை தேவ மஹாரிஷிக்கு
ஓம் கண்ணாற்றுமலை பற்ப மஹாரிஷிக்கு
ஓம் பாதர்மலை நவநாத சித்தருக்கு
ஓம் பாதர்மலை அடவி சித்தருக்கு
ஓம் திரிகூட பர்வதம் சோதி ரிஷிக்கு
ஓம் திரிகூட பர்வதம் பிரம்மானந்த ரிஷிக்கு
ஓம் சிவகரிகெந்தப் பருவதம் அனுமாதி சித்தருக்கு
ஓம் சிவகரிகெந்தப் பருவதம் செகராஜ சித்தருக்கு
ஓம் சிவகரி கெந்தப் பருவதம் வாசுதேவ மஹாரிஷிக்கு
ஓம் சிவகரிகெந்தப் பருவதம் நாதமுனிவருக்கு
ஓம் பேமலை பாலையாநந்தருக்கு
ஓம் பேமலை தொழுகனி சித்தருக்கு
ஓம் குண்டுமலை சாங்கிய மஹாரிஷிக்கு
ஓம் கோட்டை மலை மார்நாட்டுச் சித்தருக்கு
ஓம் காட்டழகர் கோயில்மலை ராமரிஷிக்கு
ஓம் காட்டழகர் கோயில்மலை பிராணயாம சித்தருக்கு
ஓம் தளவாய்மலை மணிக்கட்டிச் சித்தருக்கு
ஓம் தளவாய்மலை கணையாழிச் சித்தருக்கு
ஓம் வடகிரிமலை காலிங்க நாதருக்கு
ஓம் தாணிப்பாறைமலை அத்தரி மஹாரிஷிக்கு
ஓம் கைலாசகிரி மச்ச முனிவருக்கு
ஓம் ஓம் சதுரகிரி கோரக்க முனிவருக்கு
ஓம் விஷ்ணுகிரி இராமதேவருக்கு
ஓம் சதுரகிரிபலாவடிக் கருப்புக்கு
ஓம் மேருகிரி துர்வாச மகரிஷிக்கு
ஓம் சதுரகிரி சுந்தர மஹாலிங்கத்துக்கு
ஓம் சதுரகிரி சட்டை முனிவருக்கு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

ஓம் கும்பமலை கும்ப முனிவருக்கு அரோகரா
ஓம் மகேந்திரகிரி போக மஹாரிஷிக்கு
ஓம் சஞ்சீவிகிரி புசுண்டர் மஹாரிஷிக்கு
ஓம் இந்திரகிரி உரோம ரிஷிக்கு
ஓம் இந்திரகிரி யூகி முனிவருக்கு
ஓம் கைலாசகிரி சுந்தரானந்தருக்கு
ஓம் கைலாசகிரி அழகானந்தருக்கு
ஓம் சதுரகிரி சன்னாசி வனத்துக்கு
ஓம் பிரும்மகிரி பிர்ம முனிவருக்கு
ஓம் சித்தகிரி காளங்கி நாதருக்கு
ஓம் சித்தகிரி காலமகாரிஷிக்கு
ஓம் சித்தகிரி நந்தீஸ்வரருக்கு
ஓம் சிவகிரி தன்வந்திரி முனிவருக்கு
ஓம் சதுரகிரி மகாலிங்கம் கோயில் சுந்தரலிங்கத்திற்கு
ஓம் சூரியகிரி கொங்கணமா முனிவருக்கு
ஓம் சூரியகிரி பிருஞ்ஜக ரிஷிக்கு
ஓம் சிவகிரி மேக சஞ்சார ரிஷிக்கு
ஓம் மாவூற்று உதயகிரி சித்தருக்கு
ஓம் குபேரகிரி குருராச ரிஷிக்கு
ஓம் குபேரகிரி ஆகாச கெவுனரிஷிக்கு
ஓம் சிவகிரி காளமஹா ரிஷிக்கு
ஓம் இந்திரிகிரி வீடண முனிவருக்கு
ஓம் துலுக்கண் மொட்டை யாகோபு முனிவருக்கு
ஓம் கட்டளைக் கோம்பை மலைபிருங்கி மஹாரிஷிக்கு
ஓம் வரிசை நாட்டுமலை காளிங்க மஹாரிஷிக்கு
ஓம் கடமலைக்குண்டு மார்ச்சால மஹா முனிவருக்கு
ஓம் வரிசை நாட்டுமலை கங்காள மகா முனிவருக்கு
ஓம் சுருளிமலை தேவலோக கிரி கமலமா முனிவருக்கு
ஓம் சுருளிமலை தேவலோக கிரி வேதாந்த சித்தருக்கு
ஓம் சுருளிமலை தேவலோக கிரி பூதநாராயண சித்தருக்கு
ஓம் சுருளிமலை தேவலோக கிரி வியாச முனிவருக்கு

ஓம் சுருளிமலை தேவலோக கிரி கண்ணுவ மஹாரிஷிக்குஅரோகரா
ஓம் சுருளிமலை தேவலோக கிரி வசிஷ்ட மஹாரிஷிக்கு
ஓம் சுருளிமலை தேவலோக கிரி கபால நாதருக்கு
ஓம் சுருளிமலை தேவலோக கிரி கைலாய புடவு இமயகிரிச்சித்தருக்கு
ஓம் கருளிமலை தேவலோக கிரி சுகப்பிரம்ம ரிஷிக்கு
ஓம் கருளிமலை தேவலோக கிரி விசுவாமித்திர முனிவருக்கு
ஓம் சுருளிமலை தேவலோக கிரி மதங்கமஹாரிஷிக்கு
ஓம் சுருளிமலை தேவலோக கிரி சாங்கிய மஹாமுனிவருக்கு
ஓம் குமளிமலை கடுவெளிச் சித்தருக்கு
ஓம் குமளிமலை அழுகிணிச் சித்தருக்கு
ஓம் தேவிமலை கல்லுளிச் சித்தருக்கு
ஓம் தேவிமலை எக்கிய மஹா முனிவருக்கு
ஓம் போடிமலை சமதக்கினி மஹாரிஷிக்கு
ஓம் கொட்டைக் குடிமலை இடைக்காட்டுச் சித்தருக்கு
ஓம் எட்டூர்மலை மவுத் கல்ய மஹாரிஷிக்கு
ஓம் கொடைக்கானல் மலை சிவ வாக்கியருக்கு
ஓம் கொடைக்கானல் மலை கூர்மானந்தருக்கு
ஓம் தாண்டிக்குடிமலை கற்க மஹா முனிவருக்கு
ஓம் பூலத்தூர்மலை குமர சுந்தரருக்கு
ஓம் விமலமலை பூரண சித்தருக்கு
ஓம் நந்திமலை ஆத்மஞான சித்தருக்கு
ஓம் கண்டகணூர்மலை சவுனக முனிவருக்கு
ஓம் கொம்புதூக்கி மலை அறிவானந்த சித்தருக்கு
ஓம் பசுமலை பவணி சித்தருக்கு
ஓம் திருப்பரங்குன்றம் காசிவிஸ்வநாதருக்கு
ஓம் நாகமலை கெவுன சித்தருக்கு
ஓம் நரசிங்கமலை சிவநேச சித்தருக்கு
ஓம் கிடாரிமலை சிவப்பிரகாச சித்தருக்கு
ஓம் அழகர்மலை மேருகிரி சித்தருக்கு
ஓம வெள்ளிமலை கடைப்பிள்ளைச் சித்தருக்கு
ஓம் இடபமலை சிபிச் சித்தருக்கு

ஓம் சோலைமலை ஞான சித்தருக்கு அரோகரா
ஓம் கோம்பைமலை அகப்பைச் சித்தருக்கு
ஓம் அருவிமலை உலூகமா முனிவருக்கு
ஓம் பண்ணைமலை சலர்கார முனிவருக்கு
ஓம் வன்னிமலை அசமாறுத மஹா முனிவருக்கு
ஓம் விமலமலை பூவாடைச் சித்தருக்கு
ஓம் கொடுவாமலை லலாடச் சித்தருக்கு
ஓம் அவுனிமலை கபாட சித்தருக்கு
ஓம் கோம்பைமலை பவணந்தி முனிவருக்கு
ஓம் அடவிமலை குருபர முனிவருக்கு
ஓம் பருவதமலை தவநாத முனிவருக்கு
ஓம் மந்திமலை சுகாதார சித்தருக்கு
ஓம் தாயுமானவர்மலை சிவந்தீஸ்வரருக்கு
ஓம் கொல்லிமலை அரப்பளீஸ்வரருக்கு
ஓம் கொல்லிமலை கையிலயங்கிரி சித்தருக்கு
ஓம் கொல்லியம் பாவைக்கு
ஓம் சோரமடையானுக்கு
ஓம் பள்ளிநாதர் கோயில் சம்பு மஹாரிஷிக்கு
ஓம் கருமலை உதரகிரிச் சித்தருக்கு
ஓம் சிறுமலைக்குண்டு கமலாசன சித்தருக்கு
ஓம் கஞ்சமலை சுழிமுனைச் சித்தருக்கு
ஓம் குமளிமலை தபோதன சித்தருக்கு
ஓம் குமளிமலை ஆறாதார சித்தருக்கு
ஓம் குமளிமலை கூனக் கண்ணருக்கு
ஓம் அரிகேசர் பர்வதம் குண்டலிச்சித்தருக்கு
ஓம் அரிகேசர் பர்வதம் மெய்கண்டச் சித்தருக்கு
ஓம் அரிகேசர் பர்வதம் வாலையா நந்தருக்கு
ஓம் வாமன பர்வதம் சந்திரநாதருக்கு
ஓம் அரிகேசர் பர்வதம் முத்தானந்தருக்கு
ஓம் வாமனா பருவதம் சமயநாதருக்கு
ஓம் வாமனா பருவதம் பூதானந்தருக்கு

ஓம் வாமனா பருவதம் கடம்பநாதருக்கு அரோகரா
ஓம் வரககிரி தாருகா வன ரிஷிக்கு
ஓம் வராககிரி மார்க்கண்டேய மஹா முனிவருக்கு
ஓம் பழநிமலைப் புலிப்பாணி முனிவருக்கு
ஓம் பழநிமலை தேசிக முனிவருக்கு
ஓம் பழநிமலை கச்சியப்ப முனிவருக்கு
ஓம் பழநிமலை பிருகு மஹாரிஷிக்கு
ஓம் காஞ்சன பருவதம் சொர்கமா முனிவருக்கு
ஓம் காஞ்சன பருவதம் விண்ணோக்கிச் சித்தருக்கு
ஓம் கொங்குமலைச் சங்கிலிச்சித்தருக்கு
ஓம் உடுமலைக் கருவூராருக்கு
ஓம் பூவூற்றுமலை அகிலாண்ட சித்தருக்கு
ஓம் மஞ்சமலை வால்மீகி மஹாரிஷிக்கு
ஓம் பொள்ளாச்சி மலை விளையாட்டுச் சித்தருக்கு
ஓம் பொள்ளாச்சி மலை விமலச்சித்தருக்கு
ஓம் தேவிமலை திரிகோணச் சித்தருக்கு
ஓம் கைலாய பருவதம் அமுர்த சித்தருக்கு
ஓம் செம்பாயிமலை மிருகண்ட மஹாரிஷிக்கு
ஓம் இமயமலை பராபரச் சித்தருக்கு
ஓம் கையிலயங்கிரி சித்தர்மலை பிடி நாக்கீசருக்கு
ஓம் திரிகூட பருவதம் பரஞ்சோதி முனிவருக்கு
ஓம் திரிகூட பருவதம் சினேந்திர முனிவருக்கு
ஓம் திரிகூட பருவதம் அவந்திய மஹா முனிவருக்கு
ஓம் திரிகூட பருவதம் புவியானந்தருக்கு
ஓம் திரிகூட பருவதம் வெகுளி நாதருக்கு
ஓம் சிவிங்கியபருவதம் தத்துவநாதருக்கு
ஓம் சிவிங்கியபருவதம் நாரத மஹா முனிவருக்கு
ஓம் சிவிங்கியபருவதம் காயசித்தி நாதருக்கு
ஓம் சிவிங்கியபருவதம் ஞானானந்த சித்தருக்கு
ஓம் பிரும்மரிஷிமலை கணபதி சச்சிதானந்த சுவாமிகளுக்கு
ஓம் பிரும்மரிஷிமலை ஸ்ரீயோகலிங்க அடிகளாருக்கு அரோகரா

ஓம் பிரும்மரிஷிமலை பகவான் மகாலிங்கசுவாமிகளுக்கு அரோகரா
ஓம் பிரும்மரிஷிமலை பகவான் வாலகுரு சுவாமிகளுக்கு
ஓம் திரு அண்ணாமலை யோகிராம் சூரத்குமார்க்கு
ஓம் திரு அண்ணாமலை வெங்கடராம சித்தருக்கு
ஓம் திரு அண்ணாமலை ரமணமகரிஷிக்கு
ஓம் திரு அண்ணாமலை சேஷாத்திரி சுவாமிகளுக்கு
ஓம் பாபநாசம் சாது கிருஷ்ணவேணி அம்மாவுக்கு
ஓம் காஞ்சி காலாங்கி சிவசாமி சித்தருக்கு
ஓம் உளுந்தூர்பேட்டை சங்கரலிங்க சுவாமிகளுக்கு
ஓம் கசவனம்பட்டி அவதூத சுவாமிகளுக்கு
ஓம் தண்டையார்பேட்டை அவதூத சுவாமிகளுக்கு
ஓம் செம்பட்டி மாரிமுத்து அவதூத சுவாமிகளுக்கு
ஓம் கருமாரிபட்டி மகான் சித்தருக்கு
ஓம் மகா தேவன்மலை மகானந்தசித்தருக்கு
ஓம் சீரடி சாய்பாபாவுக்கு
ஓம் அன்னை அரவிந்தருக்கு
ஓம் புவனகிரி ஸ்ரீராகவேந்திர சுவாமிகளுக்கு
ஓம் ராஜபாளையம் சற்குருநாத சுவாமிகளுக்கு
ஓம் ராஜபாளையம் பூணால் கணபதி யோகீஸ்வரருக்கு
ஓம் ராஜபாளையம் கருப்பைய்ய ஞானியருக்கு
ஓம் ராஜபாளையம் பொன்னப்ப ஞானியருக்கு
ஓம் சதுரகிரி ராஜசந்நியாசி காளிமுத்துசுவாமிகளுக்கு
ஓம் பூண்டி மகான்சுவாமிகளுக்கு
ஓம் பகவான் கண்ணைய்யா யோகிஸ்வரருக்கு
ஓம் வடபழநி பரஞ்சோதி மகானுக்கு
ஓம் அருள்வெளி சித்தருக்கு
ஓம் மயிலை சதாசிவ பிரம்மேந்திரருக்கு
ஓம் சுருளி ஜெகநாத சுவாமிகளுக்கு
ஓம் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளுக்கு
ஓம் மாதா அமிர்தானந்தமாயிக்கு
ஓம் பழனி மூட்டை சுவாமி பழனிசாமி சித்தருக்கு
ஓம்திரு அண்ணாமலை மேலிருக்கும் நாராயண சுவாமிக்கு

ஓம் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சுவாமிகளுக்கு அரோகரா
ஓம் திருவருட் பிரகாச ஞானவள்ளல் பெருமானுக்கு
ஓம் துர்க்கை சக்திகளுக்கு
ஓம் அங்காள பரமேஸ்வரிக்கு
ஓம் மகாகாளிகளுக்கு
ஓம் வண்ணாத்தி அம்மனுக்கு
ஓம் இருசபுரவாயி அம்மனுக்கு
ஓம் ஔவைப்பாட்டிக்கு
ஓம் பேரூர் பட்டீஸ்வரருக்கு
ஓம் பன்னாரிமாரியம்மனுக்கு
ஓம் மாதேஸ்வரருக்கு
ஓம் கொல்லூர் மூகாம்பிகேஸ்வரிக்கு
ஓம் சப்த கன்னிகளுக்கு
ஓம் மதுரை மீனாட்சி அம்மனுக்கு
ஓம் காஞ்சி காமாட்சி அம்மனுக்கு
ஓம் காசி விசாலாட்சி அம்மனுக்கு
ஓம் மதுரை வீராசாமிக்கு
ஓம் பொம்மியம்மனுக்கு
ஓம் வள்ளியம்மனுக்கு
ஓம் புதுமை லட்சுமி அம்மனுக்கு
ஓம் ஆதிமூல அமிர்த தன்வந்திரிக்கு
ஓம் இலங்கை காயத்திரி சித்தர் முருகேசு மகரிஷிசுவாமிகளுக்கு
ஓம் ஓலக்கூர் வீர நாராயண பெருமாள் சித்தருக்கு
ஓம் பிரும்மரிஷிமலை அன்னை சித்தர் இராஜ்குமார் புலிபாணி சித்தருக்கு
ஓம் கலியுக அவதார பராசக்தி பிரும்மரிஷி மலை நளினி அம்மனுக்கு
ஓம் மந்திர தந்திர இந்திர யந்திர மகாசக்தி படைத்த பிரும்மரிஷி
ஸ்ரீலஸ்ரீ காகபுஜண்டர் மகரிஷி தலையாட்டி சித்தருக்கு அரோகரா!

ஓம் ஜெய் குருவே துணை ஓம் ஜெய் குருவே துணை ஓம் ஜெய் குருவே துணை

# 108 லட்சுமி போற்றி

தினமும் காலை மாலையில் பச்சரிசி மாவில் கோலமிட்டு, தீபம் ஏற்றி (ஐந்து முகமாக ஏற்றுவது சிறந்தது) 108 லட்சுமி போற்றியை மல்லிகை மலர் கொண்டு அல்லது குங்குமம் அர்ச்சனை செய்து வழிபாடு செய்ய குடும்பத்தில் லட்சுமி கடாக்ஷம் பொங்கி சர்வ மங்களம் உண்டாகும்.

| | | |
|---|---|---|
| ஓம் | அன்புலெட்சுமியே | போற்றி |
| ஓம் | அன்னலெட்சுமியே | போற்றி |
| ஓம் | அமிர்தலெட்சுமியே | போற்றி |
| ஓம் | அம்சலெட்சுமியே | போற்றி |
| ஓம் | அருள்லெட்சுமியே | போற்றி |
| ஓம் | அழகுலெட்சுமியே | போற்றி |
| ஓம் | அஷ்டலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஆனந்த லெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஆதிலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஆத்மலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஆகமலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஆளும்லெட்சுமியே | போற்றி |
| ஓம் | இஷ்டலெட்சுமியே | போற்றி |
| ஓம் | இதயலெட்சுமியே | போற்றி |
| ஓம் | இன்பலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஈகைலெட்சுமியே | போற்றி |
| ஓம் | உலகலெட்சுமியே | போற்றி |
| ஓம் | உத்தமலெட்சுமியே | போற்றி |
| ஓம் | எளியலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஏகாந்தலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஒளிலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஓங்காரலெட்சுமியே | போற்றி |
| ஓம் | கருணைலெட்சுமியே | போற்றி |

| | | |
|---|---|---|
| ஓம் | கஜலெட்சுமியே | போற்றி |
| ஓம் | கானலெட்சுமியே | போற்றி |
| ஓம் | கிரகலெட்சுமியே | போற்றி |
| ஓம் | குணலெட்சுமியே | போற்றி |
| ஓம் | குங்குமலெட்சுமியே | போற்றி |
| ஓம் | குடும்பலெட்சுமியே | போற்றி |
| ஓம் | குளிர்லெட்சுமியே | போற்றி |
| ஓம் | கெம்பீரலெட்சுமியே | போற்றி |
| ஓம் | கேசவலெட்சுமியே | போற்றி |
| ஓம் | கோவில்லெட்சுமியே | போற்றி |
| ஓம் | கோவிந்தலெட்சுமியே | போற்றி |
| ஓம் | கோமாதாலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சர்வலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சக்திலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சக்கரலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சத்தியலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சங்குலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சந்தான லெட்சுமியே | போற்றி |
| ஓம் | சந்நிதி லெட்சுமியே | போற்றி |
| ஓம் | சாந்தலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சிங்கார லெட்சுமியே | போற்றி |
| ஓம் | சீலலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சீதாலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சுப்புலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சுந்தரலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சூரியலெட்சுமியே | போற்றி |
| ஓம் | செல்வலெட்சுமியே | போற்றி |
| ஓம் | செந்தாமரைலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சொர்ணலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சொரூபலெட்சுமியே | போற்றி |
| ஓம் | சௌந்தர்ய லெட்சுமியே | போற்றி |

| | | |
|---|---|---|
| ஓம் | ஞானலெட்சுமியே | போற்றி |
| ஓம் | தங்கலெட்சுமியே | போற்றி |
| ஓம் | தனலெட்சுமியே | போற்றி |
| ஓம் | தான்யலெட்சுமியே | போற்றி |
| ஓம் | திரிபுரலெட்சுமியே | போற்றி |
| ஓம் | திருப்புகழ்லெட்சுமியே | போற்றி |
| ஓம் | திலகலெட்சுமியே | போற்றி |
| ஓம் | தீபலெட்சுமியே | போற்றி |
| ஓம் | துளசிலெட்சுமியே | போற்றி |
| ஓம் | தூயலெட்சுமியே | போற்றி |
| ஓம் | துர்க்காலெட்சுமியே | போற்றி |
| ஓம் | தெய்வலெட்சுமியே | போற்றி |
| ஓம் | தேவலெட்சுமியே | போற்றி |
| ஓம் | தைரியலெட்சுமியே | போற்றி |
| ஓம் | பங்கயலெட்சுமியே | போற்றி |
| ஓம் | பாக்கியலெட்சுமியே | போற்றி |
| ஓம் | பாற்கடல்லெட்சுமியே | போற்றி |
| ஓம் | புண்ணிய லெட்சுமியே | போற்றி |
| ஓம் | பொருள்லெட்சுமியே | போற்றி |
| ஓம் | பொன்னிறலெட்சுமியே | போற்றி |
| ஓம் | போகலெட்சுமியே | போற்றி |
| ஓம் | மகாலெட்சுமியே | போற்றி |
| ஓம் | மங்களலெட்சுமியே | போற்றி |
| ஓம் | மாங்கல்யலெட்சுமியே | போற்றி |
| ஓம் | மாதாலெட்சுமியே | போற்றி |
| ஓம் | மாசிலாலெட்சுமியே | போற்றி |
| ஓம் | முக்திலெட்சுமியே | போற்றி |
| ஓம் | முத்துலெட்சுமியே | போற்றி |
| ஓம் | மோகனலெட்சுமியே | போற்றி |
| ஓம் | வரந்தரும்லெட்சுமியே | போற்றி |
| ஓம் | வரலெட்சுமியே | போற்றி |

| | | |
|---|---|---|
| ஓம் | வாழும்லெட்சுமியே | போற்றி |
| ஓம் | விளக்குலெட்சுமியே | போற்றி |
| ஓம் | விஜயலெட்சுமியே | போற்றி |
| ஓம் | விஷ்ணுலெட்சுமியே | போற்றி |
| ஓம் | வீட்டுலெட்சுமியே | போற்றி |
| ஓம் | வீரலெட்சுமியே | போற்றி |
| ஓம் | வெற்றிலெட்சுமியே | போற்றி |
| ஓம் | வேங்கடலெட்சுமியே | போற்றி |
| ஓம் | வைரலெட்சுமியே | போற்றி |
| ஓம் | வைகுண்டலெட்சுமியே | போற்றி |
| ஓம் | நாராயணலெட்சுமியே | போற்றி |
| ஓம் | நாகலெட்சுமியே | போற்றி |
| ஓம் | நித்தியலெட்சுமியே | போற்றி |
| ஓம் | நீங்காதலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ராமலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ராஜலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஐஸ்வர்யலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஜீவலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஜெயலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஜோதிலெட்சுமியே | போற்றி |
| ஓம் | ஸ்ரீலெட்சுமியே | போற்றி |

# மூல மந்திரங்கள்

**கணபதி மந்திரம்**

ஓம் ரீங் அங் உங் கணபதியே நமஹ! இந்த மந்திரத்தை 2 லட்சம் முறை ஜெபித்தால் சூரியன் போல் பிரகாசிக்கின்ற கணபதியாய் எந்த காரியத்தை செய்தாலும் தடையில்லாமல் முன் நின்று நடத்தித் தருவார்.

**ப்ருதிவியின் (மண்ணின்) பீஜம்**

ஓம் லங்(ம்) என்ற மந்திரத்தை 1 லட்சம் முறை ஜெபித்தல் வேண்டும். இதனால் உடலில் உள்ள சகலவிதமான நோய்களும் நீங்கும். இதன் பிறகு பிரம்ம தேவனின் மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.

**பிரம்ம மந்திரம்**

ஓம் நமோ பகவதே சதுர்முகாய வேதாத்மனாய
ஹிரண்யகர் பாய பிரம்மாய ஸ்வாஹா!

பிரம்மனின் மந்திரத்தை ஜெபித்தால் மேதை போன்ற புத்தி கூர்மையுண்டாகும். வாக்கில் வன்மை உண்டாகும். மேலும் முனிவன் என்ற பெயருண்டாகும். அதோடு சகல சௌபாக்கியம் உண்டாகும்.

**அப்பு பீஜம்**

ஓம் வம்–இந்த மந்திரத்தை விஷ்ணுவின் மந்திரத்தை ஜெபிப்பதற்கு முன்பு 1 லட்சம் முறை ஜெபிக்க வேண்டும்.

**விஷ்ணு மந்திரம்**

ஓம் சதுர்புஜாய சிங்கரூபாய திரிநேத்ராய
சக்ர அஸ்தாய விஷ்ணுவே ஸ்வாஹா!

ஒரு லட்சம் முறை இந்த மந்திரத்தை ஜெபித்து அன்னதானமும் தர்ப்பணமும் ஓமமும் செய்ய வேண்டும். முறையாக ஓமம் செய்தால் சதாகாலமும் லட்சுமி உன்னிடத்தில் வாசம் செய்வாள்.

**பைரவரின் மந்திரம்**

ஓம் ஐம் ஹ்ரீம் க்லிம் ஜ்வல ஜ்வல
மஹாபீம பராக்ரமாயா சத்ரு நாஸநாய
ஹண ஹண தக தக பாஸய பாஸய
ஹ்ம் பட் சுவாஹா.

இந்த மந்திரத்தை ஜெபித்தால் சத்ருக்களின் தொல்லை நீங்கும்.

**வித்யாராசன் பீஜம்**

ஓம் ஶ்ரீம் ஐயுங் கிலியுஞ் சௌவும்
நமமோ பகவதே வித்யாராஜாய அட்சர
பிரம்மாய வித்யாராசாய ஸ்வாஹா

இதுவே குதிரை முகங்கொண்ட வித்யா ஞானமூர்த்தியின் மந்திரம். இதனால் மனப்பேய் ஒழியும்.

**அனுமாரின் மந்திரம்**

ஓம் ஹரி ஹரி ஆதி நாராயணா அகிலாண்ட நாயகா

நமோ நமோ

என்று அனுதினமும் ஓதும் அநுமந்தா லங்காபுரி ராவணா சஞ்சீவிராயா ஓடிவா உக்ரமாகவே ஓடிவா அடுத்து அடுத்து வரும் பில்லி சூனியம் பேய் பிசாசு பிரம்மராட்ஷஷிகளை பிடிபிடி அடி அடி கட்டு கட்டு வெட்டு வெட்டு கொட்டு கொட்டு தாக்கு தாக்கு ஓம் ஆம் இளைய அநுமந்தா வாவா ஸ்வாஹா. இந்த மந்திரத்தை ஐந்து முறை கூறி விபூதியை தன்னைச் சுற்றித் தூவிக்கொண்டால் திக்கெல்லாம் கட்டாகும். யார் நமக்கு எந்த செய்வினை செய்தாலும் அது நம்மை தொடாது.

**தேவி மந்திரம்**

ஓம் மகா லட்சுமீர் ஓம் மகாகாளி
ஓம் மகா கன்யா சரஸ்வதி போக வைபவ
சந்தாத்திரி பக்த அனுக்கிரக காரணியே
நமோ நமஹ!

பிரதோஷவேளையில் 108 முறை சொன்னால் சகல சௌபாக்கியமும் உண்டாகும்.

**கரூர் சித்தர் அருளிய சக்தி வாய்ந்த சிவமந்திரம்**

அறி–ஓம்–ஐயும் –கிலியும்
சவ்வும்–ரீயும்-ஸ்ரீயும்
நமசிவய மசிவயந சிவயநம
வயநமசி யநமசிவ நமஹ

**நவக்கிரக மஹாமந்திர தோத்திரம்**

ஹரிஓம் சிவசிவ அருணா போற்றி
திரிகுண் புவிவரு தேவா போற்றி
சரா சரங்களின் தலைவா போற்றி
பராபர வொளியே பானுவே போற்றி
நவகோள் நாயக நடுவே போற்றி
இந்துசேய் புந்தி அந்தணன்வெள்ளி
மந்தன் ராகு கேது கோள் போற்றி
கஷ்ட நஷ்ட கண்டமனுகாது
இஷ்ட சித்தியும் இருநில வாழ்வும்
செல்வமும் கீர்த்தியும் தேவே தருக
நல்லவை யென்றும் நானே பெறுக
அருள்வாய் அருள்வாய் அருநவ கோள்காள்
சரணம் சரணம் ஹரிஓம் நமஸ்தும்
நங்–மங்–சிங்–வங்–அங்–உங்–ஒங்–உங்–ஒங்–ஹிங்
ஸ்ரீங் மந்திரதோத்திர சித்து ஹரி நமா ஓம்.

(மனநிலை சரியில்லாத போது இதனை சொல்லி சாதுகளுக்கும், ஏழை, எளியோர்க்கும் தானம் செய்தால் நவக்கிரக தோஷம் விலகும்)

**லோக வசிய மந்திரம்**

ஓம் ரீயும் ஸ்ரீயும் ஐய்யும் கிலியும்
சவ்வும் வயநமசி சர்வ லோக
வசிகராய சுவாஹா

**குரு சரணம்**

ஒன்றே கடவுள் அறிவே சற்குரு உணர்வே பிரம்மம் சற்குருவே கடவுள் ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதானந்த சற்குருவின் திருவடிகளே சரணம்.

# தீப எண்ணெய்யின் பலன்கள்

**பசு நெய்** : ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் அஷ்ட லட்சுமிகளுக்கு உரியது.

**சந்தானாதி எண்ணெய்** : குபேர செல்வங்களையும் சகல சம்பத்துக்களையும் தரும் தேவர்களுக்கு உரியது.

**தேங்காய் எண்ணெய்** : கஷ்டங்கள், கண் திருஷ்டிகளை நீக்கும். பகவதி தேவி, விநாயகர், ரிஷிகளுக்கு உரியது.

**ஆமணக்கு எண்ணெய்** : இல்லத்தில் மன அமைதி மற்றும் அருட்கடாட்சம் தரும். பெருமாள், தட்சிணாமூர்த்தி, குலதெய்வத்திற்கு உரியது.

**எள் எண்ணெய்** : காலக்கிரக தோஷம் அனைத்தும் நீங்கும். பைரவர், சனீஸ்வர பகவானுக்கும் உரியது.

**இலுப்பை எண்ணெய்** : தனதானியங்களை செழிக்க வைக்கும். சிவன் புவனேஸ்வரி தேவிக்கு உரியது.

**புங்க எண்ணெய்** : சர்ப்ப தோஷங்கள், திருமணத் தடைகளை நிவர்த்தி செய்யும். நாக தெய்வங்களுக்கு உரியது.

**வேம்பு எண்ணெய்** : எதிரிகளின் தொல்லைகள், மாற்றாரின் துர்பார்வைகளை நீக்கும் மகிஷாசுரமர்தினிக்கு உரியது.

# விளக்கு ஏற்றும் முறை

நெய், விளக்கெண்ணெய், வேப் பெண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய ஐந்து எண்ணெய்களையும் சம அளவில் கலந்து கொண்டு, பஞ்சமுக விளக்கில் பஞ்சுத் திரியால் ஐந்து முக தீபத்தை தினமும் வீட்டில் விளக்கேற்றி வணங்கி வரவும். அதிகாலை 4.30 மணி முதல் 6.00 மணிக்குள் விளக்கேற்றி வணங்கவும். விரைவில் அஷ்ட லட்சுமி கருணைப் பார்வையால் ஐஸ்வர்யங்கள் குடும்பத்தில் பெருகும். மஞ்சள் திரியில் தீபம் ஏற்றுவதால் குபேர சம்பத்தும், திருமண பாக்யமும், புத்திர பாக்யமும் உண்டாகும். சிவப்பு நிறத்திரியில் தீபம் ஏற்றுவதால் சகல தோஷங்களும், வறுமை கடன் முதலியன நீங்கும்.

ஒரு முகத்தீபத்தை மேற்குப் பக்கமாக இருக்கும்படி ஏற்றினால் கை விட்டுப் போனவை திரும்பக் கிடைக்கும். கிழக்கு முகமாகத் தீபம் ஏற்றினால் ஆயுள் ஆரோக்கியம் கூடும். வடக்கு பக்கம் ஏற்றுவதால் தனதான்ய சம்பத்துப் பெருகும். தெற்குப் பக்கம் தீபம் ஏற்ற வேண்டாம். தீபம் ஏற்றும் நேரங்களில் "ஓம்" என மனதுக்குள் சொல்லிக் கொள்ள. வேண்டும். இரண்டு முகமாக ஏற்றினால் குடும்ப ஒற்றுமை ஏற்படும். மூன்று முகம் ஏற்றினால் பசு, பால், மனை அமையும், நான்கு முகம் ஏற்றினால் பித்ருக்களின் ஆசிகள் கிடைக்கும், ஐந்து முகமாக குத்துவிளக்கு ஏற்றி பூஜை செய்வது சகல செளபாக்கியத்தையும் தரும்.

# கால ஞானம்

**பிரும்மரிஷி காகபுஜண்டர் அன்னை சித்தர் ராஜ் குமார் சுவாமிகளுக்கு அருளியது.**

வருங்கால காலஞானம் 2010க்குப் பின் இம்மலையின் பெருமையை உலகத்திலுள்ள மனித ரூபங்களிலுள்ள பறவை, மிருகம், மரம் போன்றவர்களுக்கு எவ்வளவுதான் நீ எடுத்து சொன்னாலும்

புரியாது, ராஜா மனிதரில் உள்ள மனிதர் ஒரு கோடி பேர்களுக்கு மட்டும்தான் புரியும். ஒவ்வொரு சித்தருக்கும் ஒவ்வொரு வேலை உண்டு. வரும் இயற்கை சீற்றத்தில் கடல் கொந்தளிப்பு, 700 கி.மீ, 300 கி.மீ, கடுமையான வேகத்தில் புயல் காற்று, பேய் மழையால் அநேக நகரங்கள் காணாமல் போய்விடும்.

யானைதும்பிக்கை போல் பேய்மழை விடாமல் பெய்வதால் நான் உருவாக்கிய கங்கையும், காவேரியும் இம்மலையை சுற்றி ஓடும், இம்மலை மகாலிங்க சித்தர் சமாதியை சுற்றி 210 சித்தர்கள் ஆஸ்ரமம் அமைத்துக் கொள்வார்கள். இம்மலையின் ரகசியம் கலியுகத்தில் மகான்களுக்கே மறைந்து இருக்கும் போது சாதாரண மானிடர்களுக்கு நீ எது சொன்னாலும் கேலியும், கிண்டலுமாகதான் இருக்கும். அவன் பேசட்டும் நீ கவலைப் படாதே, ராஜா! நாம் வந்த வேலை 2010 க்குப்பின் விஞ்ஞானனிகளுக்கு எட்டாத அளவில் வானத்திலிருந்து நெருப்பால் மாபெரும் அழிவு ஏற்படும் போது தக்க சமயத்தில் உன் மூலமாக மனிதரிலுள்ள மனிதர் ஒரு கோடி பேர்களையும், இம்மலையில் கூட்டி விடுவேன். இன்னும் போக! போக! பழனிமலை, அய்யப்பன் மலை, திருப்பதி மலை கூட்டம் அனைத்தும் பிரும்மரிஷி மலை எங்கே? எங்கே? என்று என்னை தேடி ஓடி வருவார்கள். மிகப் பெரிய பூகம்பம் தென்னிந்தியாவில் ஏற்பட போகிறது. அதற்கு மேல் தான் இங்கு மக்கள் ஓடி வரும் காலம். நீ இம்மலையில் ஏற்றுகின்ற ஜோதியின் வல்லமை உலகமே வியக்கப் போகிறது.

இப்போது கூட்டத்தை கூட்டினால் வெட்டி கதைகளும் பழைய புராணங்களையும் பேசியே மனிதன் காலத்தை ஓட்டி விடுவான். அதனால் நீ எவ்வித முயற்சி எடுத்தாலும் தரும சிந்தனையுடைவனை மட்டும் இவ்விடம் அழைப்பேன். ஆசைப்பிடித்தவன் இவ்விடம் வரவே முடியாது. 2010க்குப் பின் மனிதரில் மனிதர் ஒரு கோடி ஜீவவித்துக்களை நெருப்பால் அழியாமல் இங்குள்ள விநாயகர் ஆலயத்தின் அருகில் உள்ள பாதாள சுரங்கத்தில் பூமாதேவியின்

அருளை கொண்டு குகை திறக்கப்பட்டு அந்த மனித ஜீவ வித்துக்களை 2010க்குப் பின் ஏற்படும் மாபெரும் நெருப்பில் அழியாமல் ஒரு கோடி மனித ஜீவ வித்துக்களை எலி உருவாக்கி பாதுகாத்து வைப்பதே நமது வேலையாகும்

அதன் பிறகு 120 வருடம் மாதம் மும்மாரி மழை பொழிந்து நீதி நேர்மையுடன் கொங்கணரால் மாமன்னர் ஆட்சி ஏற்படும். ஒரு கிலோ தங்கத்தை கண்டாலும் கூட மனிதன் தொட மாட்டான் பூமியில் எப்படி தங்கி வாழலாம் என்றே சிந்திப்பான். அவனே தங்கமாவான்.

வருகின்ற காலத்தில் மக்கள் எது எப்போது நடக்கும் என்று அஞ்சி! அஞ்சி வாழ்வார்கள். மக்கள் சொத்தை அபகரித்து கொள்ளை அடித்தவன் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடுவான்.

வீணாக தவத்தில் காலம் ஓட்டாதே இப்போது பூமியும் ஆகாயமும் அதிக உஷ்ணமாக இருப்பதால் தவ நிலை பாதிக்கும். உலகம் முழுவதும் மூலிகைதைலம் இல்லாதவர்கள் (விந்து சக்தியை கட்டுப்படுத்தும் வல்லமை வாய்ந்த சஞ்சீவி தைலம் உண்டு) யோகம், தியானம், குண்டலி என்று தவறான பிரச்சாரம் செய்து மக்களை திசை திருப்பி பணம் சம்பாதித்து ஏமாற்றுவதும், மன அமைதியியல்லா மாணவச் செல்வங்கள் படும் துன்பமும் சொல்ல முடியாத சூழ்நிலை. முடிந்தவரை சாமர்த்தியமாக பேசுபவர்களை கண்டு யோகம், தவம் என்று ஏமாறாதீர்கள் (என்னிடம் கேள்வி கேட்டால் என் அனுபவத்தை எளிதாக கூறுகிறேன்)

தவத்தில் காலத்தை ஓட்டுவதோடு தருமத்தில் சிந்தனை வை! தருமம் ஒன்று தான் தழைக்கும். கொள்ளை அடித்தவன் கூட தருமம் செய்தால் பிழைத்து கொள்வான். யார்? யார்? எது செய்தார்களோ! அது அது அவர்களை பின் தொடரும்.

ஏற்படுகின்ற பூமி அதிர்ச்சியால் பூமிக்குள் இருந்து புது புது விதமான விஷபூச்சிகளால் புது புது வியாதிகள் தோன்றும். ஆங்கில

மருத்துவம் எவ்வகையிலும் எடுபடாது. நான் கொடுத்த சஞ்சீவி தைலத்தை உலகமே போற்றும்.

16 வருடம் மின்சாரம் இருக்காது. அதனால் வானத்தில் பறக்கும் அநேக ராக்கட்டுகள் தானாகவே கீழே விழுந்து விடும். ஒருவருக்கு ஒருவர் தொடர்பு கொள்வது அரிதாகி விடும். முடிந்தவரை மக்கள் எருது! பசு போன்றவைகளை அதிக அளவில் பாதுகாக்கவும், வருங்காலத்தில் பொட்டி வண்டிகளும், மாட்டு வண்டிகளுமே, உங்களுக்கு பென்ஸ் கார்களாகும், அதிக மழையால் தார் ரோடுகளும் தார்மாறாக ஆகிவிடும்.

திரௌபதி ஈஸ்வரி பிறந்த மண்ணும், பஞ்ச பாண்டவர்கள் தவசக்தி பெற்ற பிரும்மரிஷி மலை அருகிலுள்ள எளம்பலூர் அருள்மிக ஏகாம்பரயீஸ்வரர் திருக்கோயில் போகரின் குருநாதர் காலங்கி ஆதி சமாதியான இடமாகும். இம்மலையில் சிறு துரும்பு தவறு செய்வது கூட பெறும் குற்றமாகும். இம் மலையில் எடுத்த எந்த பொருளும் தானாகவே இம்மலைக்கு வந்து சேரும் எப்படி என்று கேள்வி கேட்பவனை நீ பார்க்காதே! இம்மலையில் நடக்கும் மகத்துவத்தை உலகமே வியந்து பார்க்கத்தான் போகிறது.

இம்மலையின் மூன்று தூண்களாக காந்தி, நேரு, காமராஜ், வீற்றிருப்பார்கள் என்றார். என்ன சாமி? இது என்ன காங்கிரஸ் கட்சி போல் இருக்கிறதே என்றேன். காந்தியால் உருவாக்கப்பட்ட காங்கிரஸ் தர்ம தேசபக்தி உடையவர்களால் உருவாக்கப்பட்ட கூட்டு சக்திதான். இதனை கட்சியாக இப்போது மாற்றி விட்டனர். வள்ளலார் திருவருட்பாவை பள்ளிக்கு பாடமாக அரசு ஏற்று இருந்தால், படிப்பிற்கு இவ்வளவு சோதனை வராது. இவ்விடம் உருவாக்கியுள்ள விநாயகர் சிலையை உற்று பார்த்தால் என் உருவம் தோன்றும். பெரம்பலூரில் மாபெரும் தரும சாலையை வள்ளல் இராமலிங்க சுவாமிகள் தோற்றுவிப்பார். அவருக்கு கொங்கணராகிய நான் வேதாளம் போல் அவர் எது கேட்டாலும் உதவி செய்வேன் நீ காலா காலம் என்னுடன் இருந்ததால் இம்மலையில் நீ மட்டுமே எதுவும் செய்ய முடியும்.

போகப் போகப் இந்த போகரின் மகிமையை சீன தேசத்து மக்களும், ஜெர்மன்நாட்டினரும் உணர்ந்து நிறைய பேர்கள் உன்னை தேடி வருவார்கள். எதற்கும் அஞ்சாதே ராஜா! இம் மலையில் என்னை சுற்றி ஐம்பதாயிரம் பூதங்கள் காவல் காக்கின்றன. இம்மலையை சுற்றி காவல் தெய்வங்களாய், திருமங்கை ஆயி. வெள்ளன் தாங்கி ஆயி, பாஞ்சாலி, நீலி, செல்லி போன்ற காவல் தெய்வங்கள் உண்டு. இன்னும் அநேக ரகசியங்கள் இம்மலையில் தரும சிந்தனையுடன் வருபவர்களுக்கு மட்டுமே தெரியும் என்றார். அன்பே சிவம்.

**குறிப்பு** : அவசியம் இந்த புத்தகத்தை தினம் ஒரு முறை படித்தால் வாழ்வில் எல்லையில்லா சந்தோஷம் பெறுவீர்கள், மற்றவர்களுக்கு இந்த சித்தர்கள் மந்திரத்தை புத்தகமாக அடித்துக்கொடுப்பவர்கள் அளவில்லாத ஆனந்தம் பெற்று குருகடாக்ஷமாய் வாழ்வார்கள்.

# பிரும்மரிஷி மலையில் தினசரி பூஜை

மலையில் தினசரி மூன்று வேளை பூஜை நடைபெறுவதுடன் நூறு பேர்களுக்கு பிரசாதம் வழங்கப்படுகிறது.

## 210 சித்தர்கள் யாகம்

தினமும் காலையும், மதியமும், மாலையும் 210 மகா சித்தர்கள் யாகமும், 108 லட்சுமி பூஜையும் 108 மூலிகையுடன் நடைபெறுகிறது. இந்த யாகத்தில் இயற்கை சீற்றத்தில் இருந்து மக்களைக் காக்க கூட்டுப் பிரார்த்தனை அன்னை சித்தரின் அருளாசியுடன் நடைபெறுகிறது. மலைக்கு வரும் பக்தர்கள் யாகத்தைப் பொறுப்பேற்று நடத்தி சித்தர்களின் பரிபூரண அருளைப் பெறலாம்.

**மலையில் ஜோதி ஏற்றும மகிமை**

தினமும் மாலை வேளையில் மலையுச்சியில் ஐந்து வகை எண்ணெய் – நெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் கலந்து ஜோதி ஏற்றப்படுகிறது. மலைக்கு வரும் பக்தர்கள் ஜோதிக்கு எண்ணெய் தானம் செய்தால் சகல தடைகளும் நீங்கி நினைத்த காரியம் கைகூடுவதுடன், வாழ்க்கை ஜோதியைப் போல பிரகாசிக்கும்.

**கோபூஜை**

செவ்வாய், வெள்ளி, பிரதோஷம், அமாவாசை பௌர்ணமி அன்று காலை கோ பூஜை நடைபெறுகிறது. கோமாதாவிற்கு புது சேலை, மலர் மாலை அணிவித்து, சர்க்கரைப் பொங்கல் படைத்து, பூஜை செய்யப்படுகிறது. மலைக்கு வரும் பக்தர்கள் சேலை, மாலை, பூஜை, சர்க்கரைப் பொங்கலுக்குத் தேவையான பொருட்களை தந்து கோமாதா பூஜை செய்தால் குபேர லட்சுமி கடாக்ஷம் பெற்று வாழ்வார்கள், என்பது சித்தர்கள் வாக்கு.

**நித்திய கஞ்சி தானம்**

தினமும் காலையில் அரிசி நொய், பாசிப்பருப்பு, தேங்காய், கேழ்வரகு மாவு கலந்து கஞ்சி செய்து வரும் பக்தர்களுக்கும், வயதானவர்களுக்கும், குழந்தைகளுக்கும் காந்தி மகான் நினைவாக வழங்கப்படுகின்றது.

**ஆஞ்சநேயர் பிரசாதம்**

மலையில் உள்ள ஆஞ்சநேயர்களுக்கு (குரங்குகளுக்கு) மாலையில் வெல்லம், தேங்காய் கலந்து அன்னம், பழங்கள் வழங்கப் படுகிறது. மலைக்கு வரும் பக்தர்கள், பழங்கள் பொட்டுக் கடலை போன்ற வற்றை ஆஞ்சநேயர்களுக்கு வழங்கி ஆஞ்சநேயரின் அருள் பெறுங்கள்.

**பைரவர் பிரசாதம்**

மலையில் உள்ள பைரவர்களுக்கு (நாய்கள்) தினமும் வறுக்கி (பிஸ்கட்), பால் அன்னம் வழங்கப்படுகிறது.

மகா சித்தர்கள் டிரஸ்ட் ஒரு ஆன்மீக, தர்ம ஸ்தாபனமாகும் இது 2000 ஆம் ஆண்டு ராஜ்குமார் சுவாமிகளால் நிறுவப்பட்டது.

## மகா சித்தர்கள் டிரஸ்டின் மாதாந்த விசேடங்கள்

தைப் பொங்கல் அன்று பிரும்மரிஷி மலையில் பொங்கலிட்டு காலை மலை மீது மகர ஜோதி ஏற்றப்பட்டு நூற்றுக்கணக்கான கிராமவாசிகள், குழந்தைகளுக்கு அன்னதானம், வஸ்திர தானம், கரும்பு வழங்கப்படுகிறது.

அன்னைச் சித்தர் ராஜ்குமார் சுவாமிகள் தைப்பொங்கல் அன்று லொறிகளில் கரும்பை ஏற்றிச் சென்று பொள்ளாச்சிக்கு அருகில் உள்ள "டாப் சிலிப்" என அழைக்கப்படும் ஆனை மலையில் வாழும் யானைகளுக்கு, மாட்டுப் பொங்கல் அன்று கரும்பு வழங்குவார்கள். அன்றை தினம் 5 கிராமங்களைச் சேர்ந்த காட்டுவாசிகளுக்கு அன்னதானம், கம்பளிப் போர்வை, ஸ்வட்டர், சேலை வயதானவர் களுக்கு துணி, குழந்தைகளுக்கு பேனா, நோட்டு புத்தகம் ஆகியவற்றை மகா சித்தர்கள் டிரஸ்ட் வழங்கும்.

மகா சிவராத்திரி அன்று பிரும்மரிஷி மலையில் நாலு கால பூஜை, அபிஷேகம் யாகம், சிவநாம ஜபம் நடைபெறும் அன்று அன்னதானமும், சாதுக்களுக்கு வஸ்திரதானமும் நடைபெறும்.

சித்ரா பௌர்ணமியன்று திருநெல்வேலி திருக்குறுங்குடி திருமலை நம்பிக் கோவிலில், பிரதோஷம் முதல் மூன்று நாட்கள் பூஜைகள், சித்தர்கள் மகா யாகம், அன்னதானம் நடைபெறும்.

சித்ரா பௌர்ணமி அன்று ஒலக்கூர் ஸ்ரீ வீர நாராயண பெருமாள் சித்தர் குரு பூஜை நடைபெறும். குரு பூஜையில் மகா யாகம், அன்னதானம், சாதுக்களுக்கு வஸ்திரதானம் நடைபெறும்.

**வைகாசி அமாவாசை - மே/ஜூன்**

ஸ்ரீ காளஹஸ்தி மலை மீது எழுந்தருளியுள்ள ஸ்ரீ வையலிங்க கோணேஸ்வரர் சிவன் கோயிலில் பூஜைகள், மகா யாகம், அன்னதானம் சாதுக்களுக்கு வஸ்திர தானம் நடைபெறும்.

**ஆடி அமாவாசை**

ஆகஸ்ட் மாதத்தில் மதுரை அருகே சதுர கிரி மகாலிங்க மலையில் பூஜை, சித்தர்கள் மகா யாகம், அன்னதானம் சாதுக்களுக்கு வஸ்திர தானம் ஆகியன நடைபெறும்.

**51 நாள் கோ பூஜை செப்டம்பர் - அக்டோபர்**

பிரும்மரிஷி மலையில் ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதம் முதல் 51 நாள் கோ பூஜை தினமும் காலையில் நடைபெறும். 51 ஆவது நாள் பூஜையில் சுமங்கலிகளுக்கு புடவை, மங்கள பொருட்கள் வழங்'கப்படும்.

**அன்னாபிஷேகம்- ஐப்பசி பௌர்ணமி**

ஐப்பசி பௌர்ணமியில் ஸ்ரீலஸ்ரீ காகபுஜண்ட சித்தருக்கு அன்னாபிஷேகம் செய்யப்பட்டு அன்னதானம், சாதுக்களுக்கு வஸ்திர தானம் செய்யப்படுகிறது.

**தீபாவளி- அக்டோபர்/நவம்பர்**

தீபாவளியன்று காலையில் கோ பூஜை நடைபெற்று, இனிப்புகளும் அன்னதானமும் வழங்கப்படும். அன்று எளம்பலூர் கிராமத்தில் உள்ள வசதியற்ற குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் ஆடைகள் வழங்கப்படும்.

**தலையாட்டி சித்தர் குருபூஜை - நவம்பர் / டிசம்பர்**

தலையாட்டி சித்தர் ஆசிரமத்தில் பூஜை, மகா யாகம், அன்னதானம், சாதுக்களுக்கு வஸ்திர தானம் நடைபெறும்.

**கார்த்திகை மகா தீபத்திருவிழா**

இத்திருவிழாவன்று பிரும்மரிஷி மலைமீது 210 மீட்டர் திரியில், 210 கிலோ நெய்யுடன் மகாதீபம் ஏற்றப்பட்டு 210 வான வேடிக்கை நடைபெறும். ஐய்யாயிரம் மெய்யன்பர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். தருமவான்கள், பிரும்மரிஷி மலையின் திருவிழாவில் கலந்து கொள்வதுடன் வரும் பக்தர்களுக்கு தண்ணீர் வசதி, பானகம், மோர், சுக்கு காப்பி முதலியவைகளை தருமம் செய்வதுடன் அன்னதானத் திற்கு தேவையான பொருட்களை வாங்கி வழங்கினால் உங்களுடைய பிரச்சினைகள், தீராத வினைகள், கடன் தொல்லைகள், தொழில் தடைகள் நீங்கி குடும்ப ஒற்றுமையுடன் உறவினர்களுடன், நீங்கள் செய்கின்ற தொழில் கோடானு கோடி லாபத்துடன் வளரும் என்பது நிச்சயம்.

# மூலிகைப் பொருட்கள்

ஆன்மீக சிந்தனையும் மனித நேயமும் வளர்க்க மலை மூலிகைகள் கொண்டு மகா சித்தர்கள் டிரஸ்ட் உடல் ஆரோக்கியத்துக் காக நல்ல தரமான மூலிகைப் பொருட்களை தயாரித்து வழங்குகிறது.

**சித்தர்கள் முறைப்படி தயாரிக்கப்படும் பல்பொடி:**

வெள்ளறுகு கலந்த சுகர் ஸ்பெஷல் போகர் பல்பொடி, பல் கூச்சம், தேயமானம் உள்ளவர்களுக்கு ஸ்ரீ அகஸ்தியர் பல்பொடி, பல் ஆட்டம், பல்வலி உள்ளவர்களுக்கு ஸ்ரீ கொங்கணர் பல்பொடி

**சூரணம்**

எண்ணெய் கலந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களால் ஏற்படும் மலச்சிக்கல், வாயுத் தொல்லை, இரத்தம் கெடுதல் ஆகியவற்றைத் தடுக்க ஸ்ரீ அகத்தியர் சூரணம், பித்தவாயு சூரணம் ஆகியன கிடைக்கும்.

**சர்வ ரோக மகா சஞ்சீவி தைலம்**

எலும்புக்குள் ஏற்படும் மஜ்ஜை தேய்வு, தசைப்பிடிப்பு, ஊளைச் சதை, வாதக் கோளாறு, மூட்டு வலி அனைத்திற்கும் உகந்தது. ஆண்கள் புதன் கிழமையும், சனிக்கிழமையும் பெண்கள் செவ்வாய்

கிழமையும் வெள்ளிக் கிழமையும் தேய்த்துக் குளித்தால் அநேக உஷ்ணம் சம்பந்தப்பட்ட வியாதிகள் போகும்.

நீரழிவு என்ற இனிப்பு நீர் என்கிற சர்க்கரை நோய் குணமடைய இன்சுலின் நல்ல நிலையில் சுரக்கக் கூடிய காய கற்பமூலிகைகளாம் கல்தாமரை, கையாந்தகரை போன்ற அதிக சக்தி வாய்ந்த மூலிகைகளால் செய்யப்படும் மருந்துகள் கொண்டு நல்ல முறையில் வியாதி குணமாக்கப்படும்.

மேக வியாதியால் வரும் சொரி, சிரங்கு, கரும்பத்தை போன்ற தோல் வியாதிகள் வெகு சீக்கரம் குணமாக்கப்படும்.

மூல வியாதி ஆரம்ப நிலையாக இருந்தாலும், இரத்த மூலமாக இருந்தாலும் விளக்கெண்ணையால் செய்யப்பட்ட அற்புத சஞ்சீவி தைலம் துரிதமாகக் குணப்படுத்தும்.

தெய்வீக வசிய சக்தி வாய்ந்த மூலிகை சாம்பிராணி பொடி, வீட்டிலும், கோயில்களிலும், தொழில் செய்யும் இடங்களிலும் போடுவது தரித்திர தோஷங்களை நீக்கி, சித்தர்களின் குருகடாக்ஷம் பெற செய்யும்

தெய்வீக சித்தர்கள் வழியில் விபூதி, குங்குமம் ஆகியனவும் தயாரிக்கப்படுகிறது.

# மலை மூலிகைகளால் செய்யப்பட்ட சர்வலோக மகா சஞ்சீவி லேகியம்

லேகியம் "பவர் லேகியம்" சித்தர் முறையில் தயார் செய்த மனித உடலுக்கு தேவையான ஆபூர்வ சக்தியை உண்டாக்கி ஆன்மீக பலத்துடன் ஞான அறிவு சக்தியை தூண்ட கூடியதும் அநேக வியாதிகளை போக்கும வல்லமை வாய்ந்த, இழந்த ஆண்மை சக்தியை உற்பத்தி ஆக்கி முதுகு தண்டு, மூட்டு எலும்பு, கண்பார்வை, ஞாபகசக்தியை வலுபடுத்த கூடியதும், இரத்த சுத்தி செய்வதும் சித்தர்

குரு காட்டிய மலைமூலிகையும், கடை சரக்கும் சேர்ந்து செய்த லேகியம்.

மூலப்பொருள், மலைமூலிகை குரு உபதேசம் பெற்றவர்களுக்கும் தருமவான்களுக்கும் மட்டுமே சொல்லப்படும். 18 வகை சஞ்சீவி மலை மூலிகை மூலபொருட்கள் 10 கிலோ லேகியம் செய்ய எல்லா விதமான பழங்களின் சாறு 10 லிட்டர், பனங்கற்கண்டு, தேன், பசும்பால், பசுநெய், சுக்கு, மிளகு, வால்மிளகு, திப்பிலி, யானைதிப்பிலி, அதிமதுரம், செவ்வள்ளி கொடி, லவங்கப்பத்திரி, லவங்கப்பூ, சாதிப்பத்திரி, கடுக்காபூ, தான்றிகாய், வலம்புரிகாய், தக்கோலம், விழல் அரிசி, துளசிவிதை, சோம்பு, கொத்தமல்லி, வெந்தயம், ஓமம். வெள்ள கடுகு, சதகுப்பை, கடுக்காய் பிஞ்சு, அரத்தை, பேர் அரத்தை வசம்பு, கோஷ்டம், அதிவிடயம், விளாமிச்சைவேர், பறங்கிபட்டை, லவங்கப்பட்டை, சாதிக்காய், தாளிசபத்திரி, மாசிக்காய், வாய்விலங்கம், கருஞ்சீரகம், பால் பெருங்காயம், அரசன் வித்து, ஆலன் வித்து, நீர் முல்லிவித்து, ஆலிவிதை, சுருங்காலி, பிசினி, கருங்குருவை அரிசி, கார்போக அரிசி, சாரைப் பருப்பு, பிஸ்தா, பாதம், சதாமஞ்சள், குரோசணி ஓமம், அக்ரூட், பருத்தி பருப்பு, குங்கும்பபூ, முள்ளங்கிவித்து, முந்திரி, மதனகாமபூ, பூனகாலிவித்து, நிலபூசனிக்கிழங்கு, அமுக்கராகிழங்கு, நிலபனங்கிழங்கு, செவ்வள்ளிவிதை, வாலுழுவை அரிசி.

விலை மதிக்க முடியாத இந்த லேகியம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சாப்பிடலாம். சிறியவர்களுக்கு காலை இரண்டு மிளகு அளவு, இரவு இரண்டு மிளகு அளவு, பெரியவர்களுக்கு காலை சுண்டக்காய் அளவு சாப்பிட்டு பசும்பால் சாப்பிட மிகவும் உடலுக்கு உரமாகும். இரவு தூங்கும் போது ஒரு சுண்டைக்காய் அளவு சாப்பிட்டு பசும்பால் சாப்பிடவேண்டும். பழங்கள் கண்டிப்பாக சாப்பிடவேண்டும். இது சித்தர்கள் நாமாவளி மூல மந்திரத்துடன் ஜெபித்து செய்வதால், மது, மாமிசம், புகையிலை, கண்டிப்பாய் சாப்பிடக்கூடாது. ஆண்மை சக்தி பெருகும் முதுகு தண்டின் மூலம் விந்து சக்தி மேலே செல்லும்

போது கண்பார்வை, மூளைவளர்ச்சி, முகதேஜஸ், அறிவுகூர்மை, இருதய பலம், நரம்பு தளர்ச்சி நீங்கி, சர்க்கரை வியாதி அடியோடு நீங்கி, தேகபலமும் தெய்வீக பலமும் குண்டலி சக்தி தானாக எழும்பவும் குருவின் மூலம் அறியலாம்.

**லேகியம் சாப்பிடும் முன் குடலை கழுவ வேண்டும்.**
**'குடலை கழுவி உயிரை வளர்'**

என்று சான்றோர்கள் கூறியபடி, குழந்தைகளுக்கு சஞ்சீவி மூலிகையுடன் கலந்த விளக்கெண்ணை 2 ஸ்பூன் காலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு சுடு தண்ணீர் கொடுக்கலாம் இரண்டு, மூன்று முறை பேதி ஆனதும் மோர் சாப்பிட நிற்கும். பெரியவர்கக்கு சஞ்சீவி விளக்கெண்ணை 4 ஸ்பூன் அல்லது 5 ஸ்பூன் சாப்பிடலாம். வயிறு சுத்தமானவுடன் மோர் சாப்பிட நிற்கும். அதன் பிறகு லேகியம் சாப்பிடுவது மிக மிக நல்லது.

பிரும்மரிஷி மலையில் அன்னைச் சித்தர் ராஜ்குமார் சுவாமிகளிடம் வைத்தியத்திற்கு வருபவர்கள் முன் அனுமதி பெற்றுத்தான் வர வேண்டும். தங்களுடைய முழு விவரங்களையும், வியாதியினுடைய குறிப்புகளையும் முன் கூட்டியே தெரிவித்து வருதல் வேண்டும். எந்த வியாதியாய் இருந்தாலும் பகவான் ஸ்ரீ காகபுஜண்டர் மகரிஷி அருளால் தீர்க்கப்படும்.

# அன்னைச் சித்தர் அருளிது

தியானம் செய்பவர்களும், யோக அப்பியாசம் செய்பவர்களும் இக்கலியுகத்திற்கு வேண்டிய உஷ்ணத்தை தணித்து குண்டலி சக்தி பெறவும், ஞான திறவுகோலை திறப்பதற்குண்டான வழிகளையும் அடையக் கூடிய என் குருவாகிய பகவான் ஸ்ரீ காகபுஜண்டர் மகரிஷி கூறியதை உலக மக்களுக்கும் ஞான சிந்தனை உடையவர்களுக்கும் கொடுப்பதற்கு எனக்கு முழு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. என்னை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

நாடி நம்பி வரும் அன்பர்களுக்கு அனைத்து தெய்வீக ரகசியங்களை காட்டவும், கூட்டவும் எனக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆன்மீக மெய்யன்பர்கள் மனதின் மூலமாகவும், தருமத்தின் மூலமாகவும் என்னை தொடர்பு கொள்ளலாம். சந்தேகம் கேட்பவர்கள், கவலைப் படுபவர்கள், கஷ்டத்துடன் இருப்பவர்கள், கடன் தொல்லைக்காரர்கள், குடும்ப பிரச்சினை உள்ளவர்கள் என்னிடம் வரும்போது பிரச்சினைகளை மறந்து வந்தால் தெய்வீக அனுகூலம் உண்டு. நம் கர்ம வினைப்படி நாம் கஷ்டப்பட்டாலும், தயவுசெய்து கடவுளை கஷ்டப்படுத்தாதீர்கள். ஆனந்தமாய் வந்தால் அற்புத மகிழ்ச்சியையும், அருட்பெருஞ்ஜோதியின் திருப்பாதங்களை அடையக் கூடிய மார்க்கம் வெகு எளிதில் விளக்கக்கூடிய வழி பிரும்மரிஷி மலையில் உண்டு. குறிப்பாக மகான்களுடைய திருக்கோயில்களுக்கும், ஜீவ சமாதிகளுக்கும் தர்மம் செய்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சித்தர்கள் ஆன்மீகப் பயிற்சி, குண்டலிப் பயிற்சி**

30 வயதிற்குட்பட்ட ஆண்கள், பெண்கள் இப்பயிற்சியில் பங்கு பெறலாம்.

இப்பயிற்சி ஆண்களுக்கு 48 நாட்களும், பெண்களுக்கு 3 மாதங்களும் அளிக்கப்படும்.

அன்பு மானிடனே! உன்னால் எல்லாம் முடியும். எது பிறர் மகிழ்ச்சியோ, அதுவே உன் மகிழ்ச்சியாகும். எது செய்தாலும் தருமம் ஒன்று தான் தழைக்கும். நீ என்ன கொண்டு போகப் போகிறாய்! தருமம் செய்வதோடு தருமத்தை பிறர்க்கு எடுத்துக் கூறு தரும சிந்தனையை தூண்டு இல்லை. தருமத்தோடு இரு, பிறகு பார் மனிதா! உனக்குள் இருக்கும் தெய்வ மகா சக்தி தாமாகவே வெளிப்பட்டு உன்னைத்தேடி குருகடாக்ஷம் வரும்.


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

தர்மம் செய்ய பணம் தேவையில்லை
மனம் மட்டுமே தேவை

**கருணை உள்ளம் கொண்டவர்களை தெய்வ சக்தி தானே தேடி வரும்**

தருமம் தழைக்கும் தர்மமே தழைக்கும்



## ஜீவ காருண்யமே கடவுள் வழிப்பாடு

உலக மக்கள் நலன் கருதி நடைபெறும்

# மகா சித்தர்கள் யாகம்



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்
அமாவாசை, பௌர்ணமி தினங்களிலும்
மாலை 5.00 மணிக்கு நடைபெறும்

## பாபாஜி ஆலயம்

இல 57, 59 பீட்டர்ஸ் லேன், தெஹிவளை
(கடற்கரை அருகில்)
இலங்கை
தொலைபேசி + 94757846102
www.gatewaytopeace.org